பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

பக்கங்கள் 08

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 14 புதன்கிழமை (30-08-2000) தொ பேசி;- 3378 ஒலி: 254

## மன்னார் இராணுவத்தளங்கள் மீது புலிகள் மோட்டார், ஷெல் தாக்குதல்!

### எட்டு இராணுவத்தினர் காயம்!

மன்னார் உயிலங்குளம் இராணுவ முகாம் மீதும் தள்ளாடி இராணுவ முகாம் மீதும் தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் ஷெல் தாக்குதல்களில் எட்டு இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாக இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று அதிகாலை இடம் பெற்ற தாக்குதலின் போது காயமடைந்த இராணுவத்தினர் அனுராதபுரம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மன்னார் வவுனியா வீதியில் உள்ள சட்டுக்கரை குளத்துக்கு (8ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட் வீச்சில் பொலிஸார் காயம்

(கொழும்பு)

பாதாள உலகக் குழ்பலைச் சேர்ந்த இருவர் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் பொலிஸார்சென்ற ஜீப்சேதத்திற்குள்ளானதுடன் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் காயடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

நேற்றுப்பிற்பகல் 1.45மணியளவில் பம்பலப்பிட்டியில் பிக்மன் வீதியில் வெள்ளவத்தைப் பொலிஸார் சந்தேகத்தின்பேரில்பாதாள உலகக்கும்பல் ஒன்றை ஜீப்பில் துரத்திக் கொண்டு சென்றபோது அவர்கள்ஜீப்பை நோக்கி கிரனேட் தாககுதல்நடத்தினர்.

இதனால் ஜீப்பில் சென்ற பொலிஸ்சார்ஜன்ட் ஒருவரும் வீதியில் சென்ற பொதுமகன் ஒருவரும் காயமடைந்ததினால் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## ★ பதினோராவது பாராளுமன்றபொதுத்தேர்தல்

# வேட்பாளர் தெரிவில் பொ.ஐ.ஐ.முன்.; ஐ. தே. கட்சிக்குள் இழுபறி நிலை!

## 4ஆம் திகதி வேட்புமனு இறுதிநாள்

ஸ்ரீலங்காவின் 11வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வது நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டபோதும் நேற்றுவரை இருபெரும் பிரதான அரசியல் கட்சிகளான பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும், வேட்புமனுக்களை தாக்கல் செய்யவில்லை.

இவ்விரு கட்சிகளும் வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் பலசிரமங்களை பல்வேறு மாவட்டங்களிலும் எதிர்நோக்கியிருப்பதால் வேட்பாளர் பட்டியலைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாகக் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகிறது.

பொதுத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கு இரண்டாவது நாளான நேற்று நான்கு சுயேட்சைக் குழுக்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு மாவட்டங்களில் கட்டுப் பணங்களைச் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்டுப்பணம் செலுத்துவதற்கு இன்னமும் ஆறு தினங்கள் இருக்கையில் பொதுஜனஐக்கிய முன்னணி 10 மாவட்டங்களில் மட்டுமே தனது வேட்பாளர் பட்டியலை பூர்த்தி செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய மாவட்டங்களுக்கான வேட்பாளர் தெரிவில் பொது ஜனஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையே (8 ஆம்பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரசுக்கு

## புலிகள் தரப்பில்

## பயண அனுமதிப்பத்திரம் பெற்றபின்பே பயணச் சீட்டைப் பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

நாளை வியாழக்கிழமை பருத்தித்துறையிலிருந்து செல்ல இருக்கும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பலுக்கான பயணச் சீட்டுக்கள்யாவும் வழங்கப்பட்டுவிட்டதாக சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பிரயாண அனுமதிப்பத் (2 ஆம் பக்கம் பார்க்க

## பயணிகள் பஸ் காமினி வித்தியாலய மைதானத்தில் இருந்து புறப்படும்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்கு செல்லும் பயணிகள் பஸ் வவுனியா காமினி வித்தியாலய மைதானத்திலிருந்தே புறப்படும் என வவுனியா மேலதிக அரச அதிபர் சி. ரகுநாத பிள்ளை தெரிவித்தார்.

இதுவரை காலமும் வவுனியா மாவட்ட செயலக வளவிலிருந்தே இந்த பஸ் பிரமணாளங்குளம் வரை (2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பு மனு

## முஸ்லிம் காங்கிரசுக்கு பொது ஜன ஐ. முன்னணி காலக்கெடு!

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூஸ்லிம் காங்கிரஸ் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டி இடுமா? இல்லையா என்பதை அறிவிப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளரும் அமைச்சருமான டி. எம. ஜெயரத்தினா முஸ்லிம் காங்கிரசுக்கு இன்றுவரை காலக்கெடு விதித்துள்ளார்

விதிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் (8ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்.காங்கிரஸ் கூட்டுச்சேர்வதுதொடர்பாக ஜனாதிபதிக்கு 48 மணிநேர அவகாசம்!

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பான பேச்சு வார்த்தைக்கு ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க அடுத்த 48 மணித்தியாலத்துக்குள் முஸ்லிம் காங்கிரசை அழைக்காது விட்டால் வேட்பாளர் தொடர்பாக கட்சி தனிப்பட்ட முடிவு எடுக்க (8 ஆம் பக்கம் பார்க்க)

## இராஜினாமாச் செய்த அஷ்ரப் வாகனங்களை அரசிடம் ஒப்படைத்தார்

### மெய்ப்பாதுகாப்பையும் விலக்கினார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம்: அஷ்ரப் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து தனக்கு உத்தியோக பூர்வமாக வழங்கப்பட்ட வாகனங்களையும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களையும் மீள அரசிடம் ஒப்படைத்துள்ளார்.

அமைச்சர் பதவியை இராஜினா (8ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் தரப்பில்

## உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 26ஆம் திகதி வலிகாமம் மற்றும் திருமலைப் பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது

★ கப்டன் மகிந்தன்
(கந்தையா துரைசிங்கம்)
திருமலை

★ மேஜர் திருவருள்
(தம்பித்துரை சிவானந்த மூர்த்தி) யாழ்ப்பாணம்

[2ஆம் பக்கம் பார்க்க]

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தம்முடைய வேட்பு மனுவை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில் தாக்கல் செயயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட் (2ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் சேவையே என்பணி

## அரசியலில் குதிப்பதுபற்றி முடிவு இல்லை

(வவுனியா அலுவலக நிருபர்)

அரசியல் குதிக்குமாறு எனது நண்பர்கள வற்புறுத்துகின்றனர். ஆனால் அது பற்றி நான் எந்தவித முடிவுகளும் எடுக்கவில்லை. மக்களுக்கு சேவையாற்றுவது தான் என்பணியாக இருக்கும். அதிலிருந்து நான் பின் வாங்கப்போவதில்லை என விடுதலையாகி வந்துள்ள (2ஆம்பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட வேட்பாளர் தெரிவில் அ. இ. த. காங்கிரஸ் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனது வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதில் தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை வினாயகமூர்த்தி யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள காங்கிரஸ் தலைவர் அ. வினாயகமூர்த்தி கட்சி ஆதரவாளர்களுடன் வேட்பாளர் தெரிவு தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நாவலடிலேன்திருநெல்வேலி என்ற முகவரியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியும் அதனுள் அமைந்த வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்புகளிற்கு ச.குணேந்திரன் 400, கோவில் வீதி நல்லூர் வடக்கு, [இ-762]

## மீண்டும் படகுச்சேவை

(நெடுந்தீவு)

கடந்த பல மாதங்களாக சேவையில் ஈடுபடாதிருந்த குமுதினிப்படகு மீண்டும். நெடுந்தீவு, குறிகாட்டுவானுக்கிடையில் இரு தடவைகள் சேவையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
[செ-82]

# மத்திய அரசு எழுதுநர் சேவை;

# நேர்முகப் பரீட்சைக்கு இறுதி அழைப்பு

மத்திய அரசின் எழுதுநர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காக அறிவிக்கப்பட்ட 70பேரில் இது வரைநேர்முகப்பரீட்சையில்தோற்றாதவர்களுக்கு நாளை மறுதினம் முதலாம் திகதி யாழ். செயலகத்தில் காலை 9மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறுமெனவும் உரியவர்களை அன்றைய தினம் சமுகங்கொடுக்குமாறும் யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு:

ரி. சுகதர்மினி விழிசிட்டி தெல்லிப்பழை
எம். தீபா 1ஆம் தபால் கட்டை பருத்தித்துறை
கே.என். பரமேஸ்வரன் 'தேவி வாசா' தியேட்டர் லேன் இணுவில் சுன்னாகம்
என். சந்திரகாசன் செட்டித்தரை ஒழுங்கைநெல்லியடி கரவெட்டி
பி. தர்சினி 'சிங்கதிரி' மட்டுவில் தெற்கு சாவகச்சேரி
கே. மீனயோகினி கேன்சன் லேன் மானிப்பாய் றோட் உடுவில்
எஸ்.சர்மிலா நீதி மன்ற றோட் மல்லாகம்
ரி. சுதா பங்களா றோட் மீசாலை மேற்கு மீசாலை
எஸ். விஜித்திரா 8/1கன்னாதிட்டி லேன் யாழ்ப்பாணம்
வி. ஜெயகாந்தன் தெனி அம்மன் வீதி புலோலி மேற்கு பருத்தித்துறை
எஸ். மலர்விழி இல: 140 செல்லர் றோட் நல்லூர் யாழ்ப்பாணம் (ந)

## மண்டலாபிஷேக பூர்த்தி

(மல்லாகம்)

கொக்குவில் வாளக வீதி அருள்மிகு சாமுண்டீஸ்வரி அம்மன்ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி அபிஷேகம் இன்று 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (சு-14)

# பாடசாலை மாணவன் படையினரால் கைது

(யாழ்ப்பாணம்)

வரணி மகாவித்தியாலய மாணவன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் புகார்செய்யப்பட்டுள்ளது.

வரணி மகாவித்தியாலய கலைப் பிரிவு 2ம் வருட மாணவனான மிருசுவிலைச் சேர்ந்த கோபாலபிள்ளை கோகிலகாந்தன் (வயது 19) என்பவரே கடந்த 21 ஆம் திகதி மிருசுவிலில் வைத்து உசன் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாகமுறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை துன்னாலையைச்சேர்ந்த சிவபாதம் தேவநாதன் கடந்த 22 ஆம் திகதி நெல்லியடியில் வைத்துநெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்தற்போதுகாங்கேசன்துறைதடுப்பு முகாமில்தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தடுப்புமுகாம் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (க - 12)

## துப்பாக்கி ரவைகள் வீழ்ந்தன

யாழ்ப்பாணம்கல்வியங்காடு மற்றும் நாயன் மார்கட்டுப் பகுதிகளில் உள்ள வீடுகளில் நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கி ரவைகள் வீழ்ந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். எனினும் சேதம் எதுவும் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ். செயலகத்தில்

# பாதுகாப்பு ஏற்பாடுகள் துரிதம் தேர்தலை ஒட்டிய ஏற்பாடாம்

(யாழ்ப்பாணம்)

வேட்புமனுத் தாக்கல் செய்யவரும் வேட்பாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் யாழ். செயலகத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தல்களுக்கான வேட்புமனுத்தாக்கல் கடந்த திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையடுத்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும்,செயலகம் செல்லும் பாதைகளிலும் பெரும் தொகையான பொலிஸ் பிரிவினர் இரவு பகலாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வழமையை விட இம்முறை கூடுதலானகட்சிகளும்,சுயேட்சைக் குழுக்களும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடத் தீர்மானித்திருப்பதையடுத்தே மேற்படி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இதேசமயம், ஜனநாயக இடதுசாரி முன்னணி நேற்று முன்தினம், முதல் முதலாக யாழ்.செயலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### வடக்குக் கிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி

# அடுத்த மாதம் முதலாம் திகதி வேட்பு மனுக்களை தாக்கல்செய்யும்

## ஜோசப்பரராஜசிங்கம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 5 மாகாணங்களிலும் எதிர்வரும் 1 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பொதுத்தேர்தல் வேட்புமனுக்களைத் தாக்கல்செய்ய உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரும்,தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 5 ஆசனங்களிற்கு 11 அரசியல் கட்சிகள் களம் இறங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட புத்தி ஜீவிகளை ஒன்றிணைத்து சுயேட்சைக் குழு ஒன்றும்,இன்னும் இரு சுயேட்சைக்குழுக்கள் உட்பட 3 சுயேட்சைக் குழுக்களாக போட்டியிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பட்டிருப்பு,கல்குடா தொகுதிகளில் இருந்து தலா ஒரு அங்கத்தவரும்.மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியில் இருந்து இருவரும் மாவட்ட ரீதியில் 5 மாகாண உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். (சு-60)

## அடையாள அட்டைகள் வந்தன

(சுண்டுக்குளி)

நேற்று முன்தினம் ஒரு தொகுதி தேசிய அடையாள அட்டைகள் தபால் மூலம் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

மேற்படி தபால் மூல அடையாள அட்டைகள் யாவும் தற்பொழுது தரம்பிரிக்கப்பட்டு வருகிறது;

இவற்றினுள் கணிசமானவை பாடசாலை மாணவர்களுடைய அடையாள அட்டைகள்.

என்பதனால் பாடசாலை

## கௌரவிப்பு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையினால் நடத்தப்பட்ட நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் பங்கேற்ற சைவப் பெரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி இன்று புதன்கிழமை பி.ப. 1:00 மணிக்கு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடைபெறவுள்ளது.

இறைவணக்கம், தலைமை உரை, திருமுறை பாராயணம் கோளறுப் பதிகம் இடர்களை பதிகம் ஓதுதல்,

## அனுமதி இல்லை

(கொழும்பு)

எதிர்வரும்பொதுத்தேர்தல் வேட்புமனுவை தாக்கல் செய்யும் செயலகங்களுக்குள் பத்திரிகையாளர் எவரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ந-7)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு முதலாம் திகதிஇடம் பெற உள்ளது.

---

### பயணிகள்...

சென்று வந்தது.

வன்னிமாவட்ட பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமன பத்திரங்கள் வவு

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 29-ஆம் திகதி வெளியிடப்பட்ட பாட்

156810 ஏ
156810 சி
156810 பி
156810 டி

ஆகஸ்ட் மாதம் 29-ஆம் திகதி வெளியிடப்பட்ட பாட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 139691 ஏ | 139691 பி |
| 155097 ஏ | 155253 ஏ |
| 155379 ஏ | 155379 பி |
| 157774 ஏ | 157835 ஏ |
| 157921 ஏ | |

யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 156855 ஏ | |

கோப்பாய்

| | |
|---|---|
| 145728 ஏ | 145728 பி |
| 145728 சி | 145728 டி |
| 149007 ஈ | 149047 ஏ |
| 149047 பி | 149047 சி |
| 149077 ஏ | 149077 பி |
| 149077 சி | 149077 டி |
| 149626 ஏ | 149643 ஏ |
| 149650 ஏ | 149662 ஏ |
| 149664 ஏ | 149678 ஏ |
| 149673 பி | 149756 ஏ |
| 149756 பி | 149756 சி |
| 154289 ஏ | 154289 பி |
| 154322 ஏ | 154326 ஏ |
| 154332 ஏ | 154332 பி |
| 154332 சி | 154359 ஏ |
| 154385 ஏ | 154385 பி |
| 154477 ஏ | 154477 பி |
| 154521 ஏ | 154521 பி |
| 154528 ஏ | 154537 ஏ |
| 154569 ஏ | 154569 பி |

| | |
|---|---|
| 156810 ஏ | 156810 பி |
| 156810 சி | 156810 டி |
| 159705 ஏ | |

நல்லூர்

| | |
|---|---|
| 144861 ஏ | 144861 பி |
| 144868 ஏ | 144868 பி |
| 144868 சி | 144869 ஏ |
| 144871 ஏ | 144871 பி |
| 144871 சி | 144874 ஏ |
| 144874 பி | 145010 ஏ |
| 145098 ஏ | 145672 ஏ |
| 156706 ஏ | 157001 ஏ |
| 157002 ஏ | 157003 ஏ |
| 157012 ஏ | 157198 ஏ |
| 157198 பி | 157632 ஏ |
| 155174 ஏ | 155176 ஏ |
| 155336 ஏ | 155336 பி |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 150422 ஏ | 152192 ஏ |
| 152192 பி | 155118 பி |
| 155119 ஏ | 155286 ஏ |
| 155383 ஏ | 156047 ஏ |
| 156047 பி | 156047 சி |
| 156062 ஏ | 156062 பி |
| 156062 சி | 156062 டி |
| 157727 ஏ | 157739 ஏ |
| 157739 பி | 157850 ஏ |
| 157850 பி | 157850 சி |
| 157850 சி | |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 143856 ஏ | 152233 ஏ |
| 155088 ஏ | 155431 ஏ |
| 155431 பி | 155439 ஏ |
| 155439 பி | 156057 ஏ |
| 157799 ஏ | |

உடுவில்

| | |
|---|---|
| 157619 ஏ | 157732 ஏ |
| 157982 ஏ | |

(சு)

அட்டைகள்.

என்பதனால் பாடசாலை அதிபர்கள் அவற்றினை இன்று 30 ஆம் திகதி செயலகத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுமாறு தேசிய அடையாள அட்டைக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார். (சு)

---

## தமிழர்...

டணி சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி முன்னாள் எம்.பி. மாவை சேனாதிராஜா யாழ். மாவட்டநகர சபை பிரதி மேஜர் ரவிராஜ் ஆகியோர் யாழ். கூட்டணி அலுவலகத்தில் முகாமிட்டு தம்முடைய வேட்பாளர்களை தெரிவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

---

## பயண...

திரம் பெற்றவர்களுக்கு மட்டுமே பயணச் சீட்டு முகவர் பயணச் சீட்டுக்களை வழங்குவார் என்றும்,

பிரயாண அனுமதிப்பத்திரத்தைப் பெறாமல் பயணச் சீட்டைப் பெற்றவர்களுக்கு எக் காரணம்கொண்டு பயண அனுமதிப்பத்திரம் வழங்கவோ, கப்பலில் பயணம் செய்யவோ அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது. (ந-7)

ணம் கோளறுப் பதிகம் இடர்களை பதிகம் ஓதுதல், ஆசியுரை, வாழ்த்துரைகள் என்பனவற்றைத் தொடர்ந்து சைவப் பெரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (செ)

---

## புலிகள்...

ஆகிய போராளிகளும்.

27ஆம் திகதி கிளாலிப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் போது

★ மேஜர் தமிழேஸ்
(மரியதாஸ் செல்வேந்திரன்)
மன்னார்

என்ற போராளியும்

பாலமோட்டை பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில்

★ 2ம் லெப். ஈழக்கதிர்
(ஆறுமுகம் மனோகரன்)
கிளிநொச்சி

என்ற போராளியும்

நேற்று முன்தினம் நாகர் கோவில்ப் பகுதியில் இடம் பெற்ற மோதலில்

★ பொய்கை
(இராசலிங்கம் சரோஜினி தேவி) யாழ்ப்பாணம்

★ கபிலா
(பரமசாமி புஸ்பராணி)
யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [ந-7]

தேர்தலுக்கான வேட்பாளர் நியமன பத்திரங்கள் வவுனியா செயலகத்தில் ஏற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், பாதுகாப்புக் காரணங்களுக்காகச் செயலக வளவினுள் மக்கள் கூடுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ப)

---

## மக்கள்...

செஞ்சிலுவைச்சங்க அதிகாரி சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

அவசர காலசட்டத்தின் கீழ் கடந்த 16 மாத காலம் தடுப்புக் காவலில் இருந்த வடக்குக் கிழக்கு மாகாண இலங்கை செஞ்சிலுவைச் சங்க இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் விடுவிக்கப்பட்டபின் நேற்றுக்காலை வவுனியா வந்துசேர்ந்த இவரை இறம்பைக் குளம் தேவாலயத்தில் நண்பர்களும், உறவினர்களும், வரவேற்பு அளித்தனர்.

இவர் மீதான குற்றப்பத்திரம் வாபஸ்பெறப்பட்டதைத் தொடர்ந்து கிஷோர் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

நான் நிரபராதியாக வெளியே வந்துள்ளேன். இதுவே எனக்கு மனநிம்மதி எனவும் கிஷோர் தெரிவித்தார். (வ)

# யுத்தம் நிறுத்தப்பட்டு அரசியல் தீர்வு வரும் பொழுதே

# மக்களின் பிரச்சினைகள் முழுமையாக தீரமுடியும்

## புளொட் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு

(தென்மராட்சி)

எமது நாட்டில் தொடர்கின்ற யுத்தம் நிறுத்தப்பட்டு நிரந்தர அரசியல் தீர்வு என்று வருகின்றதோ அன்று தான் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் அகதிகள் பிரச்சினையும் முடிவடையும். இன்றைய சூழ் நிலையில் யுத்தத்தின் கெடுபிடிகள் காரணமாக எழுகின்ற பிரச்சினைகளின் தாக்கங்களைக் குறைக்கலாமேயொழிய அவற்றினை முற்று முழுதாக இல்லாமல் செய்ய முடியாது.

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புளொட் அமைப்பினால் அதன் மாவட்டத் தலைமையகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் புளொட் அமைப்பின் தலைவரான தர்மலிங்கம்சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்துகுறிப்பிடுகையில் இன்றைக்கு வடக்கு–கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர தேர்தலில் நிற்கப் போகின்ற எந்தவொரு கட்சிக்கும் அடிப்படை விடயங்களில் வித்தியாசம் இருப்பதாக நாம் நினைக்கவில்லை எல்லா அரசியல் கட்சிகளுமே தீர்வுத்திட்டத்தைப் பற்றித்தான் கதைக்கின்றன ஆனால் அதனை அடைகின்ற விடயத்தில் தான் கருத்து வித்தியாசம் காணப்படுகின்றது.

நடைபெறப் போகின்ற தேர்தலில் வடக்கு-கிழக்கில் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றாக சேர்வோமாயின் நாம் மொத்தமாக 20 ஆசனங்களைப் பெற்று எமது அரசியல் பலத்தைக் காப்பாற்றியிருக்கலாம் எல்லோருமே தத்தமது கட்சிகளுக்கு ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதிலேயே குறியாக இருந்து வருகின்றனர் என்று தலைவர் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டின் போது தலைவர் சித்தார்த்தனுடன் புளொட் மற்றும் ஈரோஸ் அமைப்புக்களின் பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### நல்ல அம்சங்கள் உண்டு

புளொட் அமைப்பின் தலைவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்

எங்களைப் பொறுத்த மட்டில் ஐக்கியதேசியக்கட்சியோ அல்லது பொதுஜன ஐக்கிய முன்னணியோ என்பதல்ல பிரச்சினை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு யார் தீர்வு காண முன் வருகின்றார்களோ அல்லது நம்பிக்கை தருகின்றார்களோ அவர்களை நாம் ஆதரிப்போம் என்று குறிப்பிட்ட அவர் சந்திரிகாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன இலங்கையில் இது வரை எந்தவொரு சிங்களத் தலைவரும் முன்வைக்காத நல்ல பிரேரணைகள் அடங்கிய தீர்வுத்திட்டம் இதுவாகும். இதில் பல முன்னேற்றகரமான அம்சங்கள் காணப்படுகின்றன. தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பேசித் தீர்க்கக்கூடிய ஒரு நல்ல அடித்தளமாக இது காணப்படுகின்றது.

### முதல் தடவை

சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த பண்டாரநாயக்காவுக்கும்-தரப்படுத்தலை அறிமுகப்படுத்திய சிறிமாவிற்கு மகளாக இருந்த போதிலும் கூட, தீர்வுத் திட்டத்தினை இலங்கையின் வரலாற்றிலேமுதல் தடவையாக பல எதிர்ப்புகளுக்கும் மத்தியில் சந்திரிகா மிகவும் துணிச்சலுயுடன் சமர்ப்பித்திருக்கின்றார்.

இன்றைக்கு தமிழ் மக்களுடையபிரச்சினையைப்பேச வேண்டும், தீர்க்கவேண்டும் என்ற எண்ணப்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் தான் கொண்டுவந்தது என்பதை எம்மால் மறக்கமுடியாது. மேலும் அவர்கள் இன்றைக்குப் பேச்சுவார்த்தைக்கு வருவார்களாயின் பலபிரச்சினைகள் அதன் மூலம் தீர்க்கப்பட முடியும். தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம்.

மேலும் தமிழ்மக்களின் பிரச்சினையை பேச்சுவார்த்தைமூலம் தீர்க்கப்போகின்றோமா அல்லது யுத்தத்தின் மூலம் தீர்க்கப் போகின்றோமா? என்பதில்நாம்பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்கப் போகின்றோம் எனின் நாம் மட்டும் சொல்வதுதான் சரிஎனக்கூறக்கூடாது. எல்லாவற்றையுமே கண்மூடிக் கொண்டு எதிர்ப்பதாலும் நிராகரிப்பதாலும் நாம் எதனையும்சாதித்து விடமுடியாது ஒரு இணக்கப்பாட்டுக்கு வரல் வேண்டும்.

அதேவேளை வடக்கு-கிழக்கில் யுத்த நடவடிக்கைகள் தொடரும் வரை அன்றாடப் பிரச்சினைகள் தொடரத்தான் செய்யும் வன்னிமாவட்டத்தில் யுத்தத்தின்கொடுமைகள் காரணமாக மக்கள் அனுபவித்த பல அன்றாடப்பிரச்சினைகளைஎமதுகட்சிதீர்த்து வைத்துள்ளது. யுத்தம் இருக்கும் வரை அவற்றின்பிரச்சினைகளும் தொடரும்.

மேலும் வன்னிமாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டபன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியைக் கடந்த ஐந்து ஆண்டுகளில்நாம் 99சதவீதம் முழுமையாகப் பயன்படுத்தியுளோம் எந்தவொருநிதியும்திருப்பி அனுப்பப்படவில்லைஎனக் குறிப்பிட்டார்.

(க-03-77)

---

உத்தேச அரசியல் சட்ட மூலம்

# பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை

# உலக நாடுகளை ஏமாற்றும் முயற்சியே

உத்தேச சீர்திருத்த சட்ட மூலம் நாடாளுமன்றில்சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியைத் தழுவியது தமிழ் மக்கள் யாவரும் எதிர்பார்த்த தொன்றே. இது பெரும்பான்மையின பேரினவாதிகளுக்கு பெரும் சந்தேகத்தைக் கொடுத்திருந்தால் அதில் வியப்பில்லை. ஆனால் பொ.ஐ. முன்னணியினால் கள்ளியில் பாதி, கற்றாளையில் பாதியென சேர்த்து சனியனுக்கு விரதம் பிடித்தது போல்; தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யாத ஒரு உத்தேச திட்டத்தை திடீரென சமர்ப்பித்ததில் பெரும் உள்நோக்கம்வேறாக இருக்க வேண்டுமேயொழிய தமிழர் பால் கொண்ட மனு நீதியில் அல்ல. இயன்றவரை தமிழ் கட்சிகளையும் சேர்த்து இச்சட்ட மூலத்தை நிறைவேற்றிவிட்டால் வெளிநாடுகளின் தாக்கங்களுக்கு இதனைப் பதிலாக அமைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கை ஒரு பயங்கரவாதம் என நிறுவி, பிற நாடுகளின் உதவியுடன் ஒழித்துக் கட்டிவிடலாம் என்றவேணாவாவுடனேயே சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்த கதையாய் போய்விட்டது.

கடந்த காலங்களிலும் இதே பாணியில் பல ஒப்பந்தங்களும், திருத்தங்களும் ஏற்படுத்தப்பட்டு தமிழர்களின் இன்னலைப் போக்குவதாய்க்கூறி பின்பு குப்பைக் கூடைக்குள் போட்ட கதை தான் தமிழர்களுக்கு விடையாய் அமைந்தது.

தற்போது சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தேர்தலின் பின்பு உத்தேச திருத்த மசோதாவை நிறைவேற்றியே தீருவேன் என்று சூளுரைத்துள்ளார். இன்னொரு பக்கத்தில் புதிய பிரதமர் இரத்தினசிறி விக்கிரம நாயக்க தமிழர்களுக்கு இந்த நாட்டில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் பயங்கரவாதத்தை முடித்துக் கொண்டு பின்பு அதனைப் பார்க்கலாம் என்று பதவி ஏற்ற கன்னிப் பேச்சில் அழுத்தம் தெரிவித்துள்ளார். நல்ல வேளையாக இந்த நாட்டில் தமிழன் என்றொரு இனம் உண்டா என்று கேட்காமல் விட்டது மட்டமான ஒரு கனவான் தன்மையே.

## சங்குநாதம்

ஐம்பது வருடங்களுக்கு மேலாக கும்பகோண குடமுழுக்குப் போல் கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்கு ஒரு முறை தமிழனைப் பூண்டோடழிக்க சிங்கள அரசியல் வாதிகளாலும், பேரினவாதிகளாலும், பௌத்த துறவிகளாலும் தூண்டப்பட்டு அரங்கேறும் இன வன்செயல் கூட தற்போதைய பிரதமர் அறிந்திலர் போலும், பிரச்சினை உண்டோ, இல்லையோ தமிழரின் பிரச்சினை சம்பந்தமாக எதிர்க்கட்சியுடன் கலந்தாலோசனை செய்வதற்கு இணக்கப்பாடு கண்டதையே இதுவே நல்ல சகுனம் என்று பெரிதாக மார்பு தட்டி உரிமையைக் கொடுக்கும் மசோதா இதுவே என்று சபையில் சமர்ப்பித்து ஜனாதிபதி உரை நிகழ்த்தியதெல்லாம் புதிய பிரதமருக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை.

யுத்தம் என்றால் யுத்தம் என்பதும், சிங்களவர் மரம். தமிழன் அதனைச் சுற்றிப் படரும் கொடி என்பதும், சமாதானத்துக்கான யுத்தம் இதுவென்பதும், தமிழனுக்கு எது வித உரிமையும் கிடையாது. தமிழன் வந்தேறு குடி. அடிப்படை மனித உரிமையைக்கூட கொடுக்க முடியாது என்பதும், தாங்களே சிங்கள மக்களின் பாதுகாவலர் என்பதை உறுதிப்படுத்த கூறியது போல் புதிய பிரதமரும் தன்னை வெளிக்காட்டியுள்ளார். ஒன்றை மட்டும் அவர் அறிந்துள்ளார். இனவாதம் பேசி தமிழரை இழிவு படுத்தினால் இடம் ஒன்று தனக்கெப்போதும் உண்டு என்பதே.

### துறவிகளின் ஆசை

இலங்கை அரசியலின் கடிவாளத்தை பௌத்த மகா சங்கமே கையில் கொண்டுள்ளது. இவர்கள் கிளர்ந்தெழுந்தால் இருக்கும் ஆட்சியை வீழ்த்தி இன்னொரு அரசை ஏற்படுத்தும் சக்தி அவர்களுக்குண்டு. இல்லை அவர்களுக்கு அந்தமாதிரியான செல்வாக்கை கொடுத்துள்ளனர். சிங்கள அரசியலவாதிகள். பசித்தவன் தொடர்ந்து பசியோடு இருக்க புசிப்பவன் வயிறார புசித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்கிறது இலங்கையின் பௌத்த தர்மம். புத்த பெருமானை துறவு நிலைக்கு இட்டுச் சென்ற மூப்பு, பிணி, தூக்காடு என்ற மனித அவலங்கள் அபிவிருத்தியடைந்த நிலையில் இலங்கையில் துறவு - ஆட்சி - ஒடுக்குமுறை எனமாறி இன்னோரினத்துக்கு அவலம் விளைவிக்கின்ற பெரும்தர்ம தேவதைகளாக தங்களைக் காட்டி நிற்கிறார்கள்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை யொன்றில்லை; பயங்கரவாதமேயுண்டு, சிங்களவருடைய உரிமைகளே பறிபோகின்றது; எனக் கூச்சல் போட்டு தங்களுக்கென உன்னதமான அந்தஸ்தை துறவின் பின் கைக் கொள்ளவும்; நிரந்தரமாக இத் தீவில் தமிழனை இரண்டாந்தரப் பிரஜைகளாக அடிமை கொள்ளவும் பௌத்தமகா சங்கத்தினர் தீராத ஆசை கொண்டுள்ளனர் என்பது தெளிவு.

### பழைய கதிரைக்கு புதிய கால்கள்

சிறுபான்மைத் தமிழரின் வாழ்வுரிமையை எந்த பெரும்பான்மைச் சிங்கள அரசியல் வாதிகளும் அங்கீகரிக்க மாட்டார்கள் என்பது வெளிப்படை. காலம் காலமாக மாவட்டம், மாகாணம, மாநிலம் எனக்கூறி பழைய கதிரைக்கு புதிய கால்களைப் பொருத்துவதாகவே இலங்கை வாழ் தமிழனை ஏமாற்றி வந்திருக்கிறார்கள் சிங்கள அரசியல் வாதிகள்.

### வாழ்வுரிமை

குட்டக் குட்டக்குனிந்தவன், இனிமேல் குனிய முடியாது எனநிமிர்ந்தவன் இனிக் குனிவான் என எண்ணுதல் சாலவும் பொருந்தாது. இன்று நடக்கின்ற போராட்டம் தமிழனின் வாழும் உரிமைப் பிரச்சினையாகும்.

## சிரபுரத்தான்

இதனைத் தீர்ப்பதற்குப் பதிலாக சமாதானத்துக்கான யுத்தம் என போர் தொடருமானால் நாடு அதளபாதாளத்தில் விழும் என்பது மட்டும் உறுதி. நாட்டையும், சிங்கள இனத்தையும் காப்பாற்றுவதாக கூறி அரசியல் வாதிகளும் பேரினவாதிகளும், பௌத்த துறவிகளும் உப்புக்கல்லாக மாறி இலங்கையை அரித்துவிடுவார்களேயொழிய புடம் போட மாட்டார்கள் என்பது திண்ணம்.

# மாகாண மட்ட கண்காட்சிப் போட்டி

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் மாகாண மட்ட கண்காட்சி இவ்வருடம் எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 09, 10, 11ம் திகதிகளில் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் போட்டிகளும் இடம்பெறவுள்ளதால் இதில் கலந்து கொள்ள விரும்பும் யாழ். மாவட்ட உற்பத்தியாளர்கள் எதிர் வரும் 2ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் பொருளின் பெயர், பொருளை தயாரித்தவர், முகவரி, பொருளின் விலை போன்ற விபரங்களை மூன்று பிரதிகளில் தயாரித்து பொருட்களுடன் கையளிக்கும்படி முகாமைத்துவ உதவியாளர் கேட்டுள்ளார். (சு)

## இராசி பலன்

30-8-2000
(ஆவணி 14, புதன்)
பிரதமை
பி.ப 2.31 வரை
பூரம்— பி.ப. 5.36 வரை
இராகுகாலம்
12.05- 1.35
சுபநேரம் 4-35 6 05

**மேடம்**
உஷ்ண ரோகம், உறவினரால் கவலை, காரியஜெயம்.

**இடபம்**
பொருள் வரவு, பிரயாணம் நம்பிக்கை வைத்தோர் கேடு சிறுரோகம்.

**மிதுனம்**
திடீர் வருமானம், உல்லாசம், சுவாரஸ்யம், எடுத்த முயற்சி வெற்றி.

**கடகம்**
வீண்வார்த்தை, காரிய நட்டம், பணச் செலவு, தடுமாற்றம்.

**சிங்கம்**
குடும்ப மகிழ்ச்சி, உடல் நலம், இடமாற்றம், துயரச் செய்தி.

**கன்னி**
காரிய நட்டம், மனக்கிலேசம், எதிர்பாராத சிலவருமானம், சுப செய்தி.

**துலாம்**
பிரசித்தி பெறல், மதிப்படைதல், பொருள் வரவு, நன்மையான காரியம்.

**விருச்சிகம்**
அலைச்சல், காரிய வெற்றி, தொழில் அதிகாரம்.

**தனு**
நோய்வாய்ப்படல், நிலை மாறுதல், பிரயாணம், தந்தை வழி உறவு.

**மகரம்**
துக்கம், வாகனத்தால் சுகக்குறைவு, சிறுவியாதி, பிரயாண அலைச்சல்.

**கும்பம்**
திருமணப் பேச்சு, புதிய நண்பர்கள், விருந்துபசாரம், தேவையற்ற பயம்.

**மீனம்**
எடுத்த காரியம் முன்னேற்றம், குடும்ப மகிழ்ச்சி, சிறு பிரச்சினை, புதிய முயற்சி.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

புதிய அரசியல் சீர்திருத்தம்

# தமிழரின் விருப்பத்தை பூர்த்தி செய்யாவிட்டாலும்

# உறுதியான அரசியல் வளர்ச்சிக்கு வழிகோலும்

## அ.வரதராஜப் பெருமாள் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுஜன ஐக்கிய முன்னணியினால் உருவாக்கப்பட்ட அரசியல் தீர்வு ஆலோசனையானது தமிழரின் விருப்பத்தை பூர்த்தி செய்யாவிடினும் அரசியல் அமைப்பு வளர்ச்சிக்கு ஒருவழியை திறந்து விடும் வாய்ப்பு ஏற்படுவதாக இத்திட்டம் அமையுமென வடக்கு-கிழக்குமாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஈ.பி.ஆர்.எல்.எவ்.அலுவலகத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் தேர்தலின் பின் மக்கள் ஆணையுடன் அரசியல் யாப்பு ஆக்குவேன் என சந்திரிக்கா மக்களுக்கு உறுதி கூறி அவ்வாறே தாம் கொடுக்கும் வாக்குறுதிகளை செயற்படுத்துவார் என நம்புகின்றோம்.

தமிழர்களின் பிரதிநிதிகளுக்கு, தமிழர்களின் அன்றாட பொருளாதார நடைமுறைப் பிரச்சினை. இப்பிரச்சினைகளுக்குகாரணமான அரசியல் தீர்வு என்பவற்றுக்காக போராட வேண்டியுள்ளது.

எனவே தான் இவ்விருவிடயங்களிலும் நாம்நிதானமாக செயற்பட வேண்டுமென கருதுகின்றோம்.

இந்த அடிப்படையிலேயே இத்தேர்தலில் மக்கள் முன் வாக்கு கேட்டு வந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

தமது கடந்தகால அரசியல் குறித்து அவர் தெரிவிக்கையில், 1988மாகாணசபைதேர்தலிலும்1989பாராளுமன்றத் தேர்தலிலும் எமது நோக்கம் 87 களில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைத் தமிழ்மக்களுக்குச்சாதகமான தமிழ்மக்களின் அபிலாசைகளைத் தீர்த்து வைக்க அதைப் பயன்படுத்த வேண்டும் என்பதாகவே இருந்தது.

### பிரச்சினை விகாரமடைந்தது

இன்று இப்பிரச்சினை விரிவடைந்து விகாரமடைந்துள்ளது.

அன்று தமிழரசுக்கட்சிக்கோ, தமிழர் விடுதலைக்கூட்டணிக்கோ இல்லாத பிரச்சினை இன்று எமக்குண்டு எனவே தான் இப்பிரச்சினை தீர்வில் புதிய அணுகுமுறை தேவையென கருதுகின்றோம்.

அத்தகைய அணுகுமுறை கண்ணை மூடி அரசை ஆதரித்தல் அல்லது அன்றாடப்பிரச்சினைக்கு தீர்வுபெறுவதுடன் திருப்திப்படல் என்பதல்ல. அல்லதுஅரசை எதிர்ப்பதன் மூலம் அரசியல் நடத்தல்என்பதல்ல. இன்று தமிழ்மக்கள் தமது பிரச்சினைகளை தமது பிரதிநிதிகளிடம் கூறி செய்ய முடியாதுள்ளார்கள்.

ஆனால் மக்கள் தமதுபிரச்சினைகளுக்கு ஏதோஒருவகையில் அரசுடன் தொடர்புபட்டே இருக்க வேண்டியுள்ளது.

எனவே எமது பங்கை எடுக்கக்கூடியவற்றைஎடுக்கவேண்டும் கிடைக்கக்கூடியவற்றை எடுக்க போராட வேண்டும் இந்தஅணுகுமுறையேஎமக்கு பிரதானம்.

எனவே தமிழர்அரசியல் வாழ்வில் இத்தேர்தல் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கும் என நம்புகின்றோம்.

இதை புரிந்து கொண்டு தமிழ்மக்கள் செயற்திறன் மிக்க பிரதிநிதிகளை தெரிவு செய்யவேண்டும். தேர்தலை புறக்கணிப்பதாலோ அல்லது குழப்புவதாலோ தமிழ்மக்களுக்கு எந்த நன்மையும்இருக்காது என்றார்.

நேற்றைய சந்திப்பில் த.றொபேட்சுபத்திரன்,எஸ். மோகன் ஆகியோரும் உடன் இருந்தனர். (க-3)

---

வடக்கு கிழக்கு மாகாணத்தில்

## 13 அரசியல் கட்சிகள் களத்தில் குதிக்கத் தயார் நிலையில்

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் எதிர் வரும் பொதுத் தேர்தலில் 31 ஆசனங்களுக்காக 13 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் களத்தில் இறங்க உள்ளன.

கலைக்கப்பட்ட 10வது நாடாளுமன்றில் ஆசனங்களைக் கொண்டிருந்த ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் இம் மாகாணத்தில் போட்டியிட இருக்கின்றன.

இதைத் தவிர பிரஜைகள் முன்னணி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ். புதிய இடதுசாரி முன்னணியும் இடம் பெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் 9 அங்கத்தவர்களும், அம்பாறையில் 7 அங்கத்தவர்களும் மட்டக்களப்பில் 5 அங்கத்தவர்களும், வன்னியில் 6 அங்கத்தவர்களும், திருமலையில் 4 அங்கத்தவர்களும் மேற்படி கட்சிகளில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளனர். (சு-60

---

## அடுத்தமாதம் 7 ஆம் திகதி இடம்பெறும் சுகவீன லீவுப் போராட்டம்

### அ.இ.பொ ஊழியர்சங்கமுன்னெடுப்பு

(மட்டக்களப்பு)

அகில இலங்கைப் பொது ஊழியர்சங்க உறுப்பினர்கள் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்க உறுப்பினர்களின் இடர்காலக் கொடுப்பனவுக் கோரியதற்கு சாதகமான பதில் தருமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கு சாதகமான பதில் இடைக்காத பட்சத்தில்திட்டமிட்டபடி 7ஆம் திகதி சுகவீன

---

## பயிற்சித்திட்டம் ஆரம்பம்

(தென்மராட்சி)

பருத்தித்துறை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் சத்துணவுக்கூடத்தில் தற்போது இயங்கிவரும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாகிய அறவழிப்போராட்டக்குழு அங்கு மகளிர்க்கான நவீன தையல்பயிற்சித்திட்டத்தினை செப்ரெம்பர்மாதம் 15 ம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சித்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பும் யுவதிகள் தமது பெயர்விபரங்களை அங்கு பதிவுசெய்யும்படி நிறுவனத்தின்தலைவர் வி. ஜீ. தங்கவேல் தெரிவித்துள்ளார்.

(க-77)

---

கைதடி சாராய

## வடிசாலை இயங்காததையடுத்து 20மில்லியன் ரூபா நட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் கைதடியில் நடாத்தப்பட்டு வந்த சாராய வடிசாலை கைவிடப்பட்டதனால் கொத்தணிக்கு 20மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இது பற்றி இக்கொத்தணியின் தலைவரான கி.பூபாலசிங்கம் தகவல் தருகையில்!

வடிசாலையில் பொறித்தொகுதி தளபாட உபகரணங்கள் மற்றும் உற்பத்திகள் யாவும் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

யுத்த நெருக்கடியினால் அங்கிருந்தவற்றை மீட்டுக் கொண்டு வரமுடியாத சூழ்நிலை நிலவியது என்றும், சாராய வடிசாலையில் பணியில் ஈடுபட்டிருந்த சுமார்20 பணியாளர்கள் வரை பணி செய்ய முடியாதுள்ளனர் எனக் குறிப்பிட்டார். (க-77

---

## காதி நீதிபதியை தெரிவதற்கான நேர்முகப்பரீட்சை இன்று

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி.ஆரையம்பதி, களுவங்கேணி,பட்டிப்பளை, வெல்லாவெளி ஆகியபிரதேசசெயலாளர் பிரிவிற்குகாதிநீதிபதியைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை இன்று30 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்ற தொகுதியில்வுள்ள பிரதம நீதியரசரின்காரியாலயத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி பிரதேச பொறுப்பான காதிநீதிபதியாகக் கடமை புரிந்தவர்கடந்த மே மாதம் பதவி விலகியதை அடுத்து இப்பதவி வெற்றிடமாகவே உள்ளது.

மேற்படி பதவிக்கென 15 பேர் விண்ணப்பித்துள்ளனர் எனினும் நேர்முகத்தேர்வின் மூலம் ஒருவர்தெரிவுசெய்யப்படவுள்ளார்.

தற்போது மேற்படி பதவியில் பதில்காதி நீதிபதி நாளாந்த கடமை புரிந்துவருவது குறிப்பிடத்தக்கது.

(சு-60)

---

## இடை நிறுத்தப்பட்ட பஸ்சேவை ஆரம்பம்

(வவுனியா)

இடைநிறுத்தம் செய்யப்பட்ட வவுனியா உள்ளூர் பஸ் சேவைகள் அனைத்தும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா சாலை நிர்வாக அதிகாரி கனகசெல்வராசா தெரிவித்தார்.

---

## இலவச சிகிச்சை முகாம்

(சுண்டுக்குளி)

களின் இடர்காலக் கொடுப்பனவு வழங்க கோரியே இச் சுகவீன லீவுப் போராட்டம் நடைபெறவுள்ளது.

மிட்டபடி 7ஆம் திகதி சுகவீன விடுமுறைப் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-60)

## எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஈரோசுடன் இணைந்து புளொட் போட்டியிட முடிவு

### - முக்கியபிரமுகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முக்கிய பகுதிகளில் ஈரோஸ் அமைப்புடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக அவ்அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் (வலம்புரிக்கு) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து திட்டவட்டமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் தமிழ்க் கட்சிகள் இணைந்த அடிப்படையில் போட்டியிட மேற்கொண்ட முயற்சிகள் கைகூடவில்லையென்றும் தெரிவித்தார்.

தமிழ்க்கட்சிகள் இணைந்த அடிப்படையில் போட்டியிட்டால் பலம்மிக்க ஒருநிலையை அடைய வாய்ப்புஉண்டு என்றும் துர்அதிர்ஷ்டமாக அம்முயற்சி கைகூடவில்லையென்றும் தெரிவித்தார்.

(வ-க-03)

---

## நல்லூரில் பக்தர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலயத் தேர்த் திருவிழா பக்தி பூர்வமாக நடைபெற்றது. பெருந்திரளான அடியார்கள் இதில்கலந்து கொண்டதுடன் பக்தர்களின் காவடியாட்டமும் பெருமளவில் காணப்பட்டது. (க - 106)

தங்கவேல் தெரிவித்துள்ளார். (க-77)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நாளை வியாழக்கிழமை (31ஆம் திகதி) வரை ஒத்தி வைத்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கூட்டம் நேற்று இடம் பெறும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டே ஒத்திவைத்ததாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-3)

(சுண்டுக்குளி)

உரும்பிராய் லயன்ஸ் கழகம், ஊரெழு கிராம அபிவிருத்தி சங்கத்தின் அனுசரணையுடன் கிராம அபிவிருத்தி சங்கப் பணிமனையில் சிகிச்சை முகாம் ஒன்றை இலவசமாக உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி. ஆறுமுகம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப5 மணிவரை நடத்தியது.

இவ் சிகிச்சை முகாமில் கண்பரிசோதனை, நீரிழிவு நோய் நெஞ்சுடன் சம்பந்தப்பட்ட பரிசோதனைகள் நடத்தப்பட்டு அதற்கான மருந்துகளும் வழங்கப்பட்டன.

இரு பஸ் வண்டிகள் அடுத்தடுத்து தீக்கிரையாக்கப்பட்ட சம்பவத்தினால் கடந்த 45 தினங்களாக உள்ளூர் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

பஸ் சேவை ஆரம்பிக்கப் போது கிராமமக்கள் மாலை அணிவித்து கரகோஷம் செய்தும் பட்டாசு கொளுத்தியும் பஸ்களை வரவேற்றனர்.

பஸ்களுக்கு மக்களே பாதுகாப்பு வழங்க முன்வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கவை. (வ)

## புதிய முகங்கள் தேர்தல் களத்தில் இளைஞர்களுக்கு முன்னுரிமையாம்

### கட்சி வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பதினொராவது பாராளுமன்றத்தினை தெரிவு செய்வதற்கென நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களில் பங்கு கொள்கின்ற கட்சிகள் பல, தம் சார்பான வேட்பாளர் தெரிவில் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்திருப்பதாக அறிவித்துள்ளன.

நாட்டின் எதிர்காலத்தை ஒளிமிகுந்ததாக்கும் எண்ணப்பாட்டின் விளைவாக இம்முடிவினை தாம் எடுத்திருப்பதாக தமது நிலைப்பாடு தொடர்பாக மேற்படி கட்சிகள் விளக்கமளித்துள்ளன.

ஜனதா விமுக்திப் பெரமுன, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் உள்ளிட்ட பல கட்சிகள் இந்நிலைப்பாடு தொடர்பான தமது அறிவிப்பினை வெளியிட்டுள்ளன. (உ

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
[illegible] படிப்பகம்

## இன்று ஒரு தகவல்

# இறைவன் துணை இருந்தால் வெற்றி நமதே துல்லியமாக விளக்குகிறது பாரதக்கதை

அது பாரதப் போர் நடந்த காலம் - திருதராஷ்டினன் புதல்வரான துரியோதனன் பாண்டவர்களின் ஆட்சியை கபடமாகக் கைப்பற்றி பாண்டவர்களிற்கு அநீதி இழைத்தான். பாண்டவர்களுக்காக தூது போன கிருஷ்ணன் துரியோதனனிடம் முதலில் அவர்களிற்குரிய ஆட்சியைக் கொடுக்குமாறு வேண்டினான். துரியோதனன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அதன் பின் கிருஷ்ணன் ஊர் ஒன்றினை கொடுக்குமாறு வேண்டினான். அதற்கும் சம்மதமில்லை துரியோதனனிற்கு. ஒரு ஊசியளவு நிலம் கூட வழங்க மறுத்து விட்டான்.

வேறு வழியில்லை, யுத்தம் நடைபெற வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டு விட்டது. எல்லாம் அந்த கபட நாடக சூத்திரதாரியான கண்ணன் வேலைதான்.

பாரதப் போர் வெகு தீவிரமாக நடந்து கொண்டிருந்த காலம் அது - பாண்டவர்களின் பக்கம் கண்ணனும் துரியோதனன்பக்கம் கண்ணனது சேனைகளும் இணைந்து கொண்டனர்.

பார்த்தன் பக்கம் துணை நின்ற கண்ணனைக் கண்ட கௌரவர் அணியை சேர்ந்த சில விவேகியர் பார்த்தன் இனி ஆயுதம் வேறு எடுத்து போர் புரிய வேண்டுமா? கண்ணன் துணை நிற்பது ஒன்றே பாண்டவர்களின் வெற்றிக்கு போதுமானதுஎன எண்ணலாயினர்.

கௌரவர் தரப்பின் பிரதான தளபதியாக பீஷ்மர் பணிபுரிந்தார். கௌரவர் சேனையின் இன்னுமொரு தளபதி கர்ணன். இவ்விதம் வலிமை படைத்த பலர் கௌரவர் சேனையின் பக்கம் அணிவகுத்து நின்றனர்.

பீஷ்மர் எல்லையற்ற ஆற்றலும் நற்பண்பும் மிக்கவர். தவ நிஷ்டையுடையவர்- பாணப் பிரயோகத்தின் நுட்பங்களும் அறிந்தவர். அருச்சுனனின் பாட்டனும் அவரே.

பஞ்ச பாண்டவர்களின் மனைவியான திரௌபதிக்கு பீஷ்மரின் ஆற்றலைப் பற்றி தெரியும் அர்ச்சுனனின் உயிரிற்கு பாதுகாப்பாக என்ன செய்யலாம்என கிருஷ்ணனை கேட்டாள்.

கண்ணன் அதற்கு திரௌபதியை பீஷ்மரிடம் சென்று ஆசீர்வாதம் வாங்கும்படியும் அப்படிச் செய்யும் போது செல்லும் படியும் வளையல்களை ஒலி எழும்புப்படி செய்யுமாறும் பணித்தார். போர் நடந்து கொண்டிருந்தது. ஆனால் அக்காலத்தில் இரவு வேளைகளில் இரு தரப்பினரும் போரில் இருந்து ஒதுங்கி விடுவர். ஓய்வெடுத்துக் கொள்வர். இவ்விதம் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் யாராவது எதிரிகள் வந்தாலும் நட்புடன் உரையாடுவர்; இது அக்கால யுத்த தர்மம் இப்படித்தான் ஒரு நாள் போர் நடந்த பின் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார் பீஷ்மர்.

இத் தருணத்தில் கண்ண பெருமான் பணித்தபடி திரௌபதி முகத்தை மறைத்துக்கொண்டுகைகளில் உள்ள வளையல்கள் ஒலி எழுப்ப பீஷ்மரின் முன்னால் வந்து பணிந்தாள். பீஷ்மரும் அக்கால வழக்கப்படி ''தீர்க்க சுமங்கலி பவ'' என ஆசி கூறினார். திரௌபதி அதன் பின் தனது முக்காட்டை விலக்கி தன்னை வெளிப்படுத்தினாள் பீஷ்மரும் அவளை நோக்கி ''என்னம்மா ஏன் இந்த அகாலவேளையில் வந்தாய்'' எனக் கேட்டார். ''நீங்கள் என்னை தீர்க்க சுமங்கலி என்று வாழ்த்தி விட்டீர்கள். இனிப் பயமில்லை. அர்ச்சுனன் முதலிய பாண்டவர்களுக்கு எவ்வித உயிராபத்தும் ஏற்படப் போவதில்லை. அது போதும் எனக்கு என்று பதிலளித்தாள் திரௌபதி. அப்பொழுது தற்செயலாக வாசலைப் பார்த்தார் பீஷ்மர்; அங்கே கண்ண பெருமான் புன்முறுவலோடு காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

''கண்ணா எல்லாம் உன் வேலைதானா? நீ அர்ச்சுனன் கூட நிற்கும் போது பாண்டவர்களிற்கு தான் வெற்றிகிட்டும்'' என நினைத்துக் கொண்டார் பீஷ்மர். இறுதியில் பாண்டவர்களே பாரதப் போரில் வெற்றியீட்டினர்.

இறைவன் துணை இருந்தால் எக்காரியமும் வெற்றியடையும். அதிகாரம், பணபலம், படைபலம் அனைத்தும் இருந்தும் இறை துணை இல்லாவிடில் தோல்வியே கிட்டும் என்று இச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது:

(நன்றி புனிதம் அருளும் புட்ட பர்த்தி)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை இரதோற்சவமும், 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது.

## வள்ளி திருமணம் வில்லிசை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று புதன் கிழமை ''வள்ளி திருமணம்'' என்னும் பொருளில் சைவப்புலவர் க. ஸ்ரீதரனின் வில்லிசை இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் பி. ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

## நகைகள் ஒப்படைப்பு

(அரியாலை)

நல்லூர்கந்தசுவாமிகோவில் தேர் உற்சவத்தின் போது பக்தர்களால் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், சைக்கிள் திறப்புக்கள், தங்க ஆபரணங்கள் யாழ். மாநகரசபை இந்து வீடுதியில் இயங்கும் உற்சவகாலப் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-106)

## விடுதலை செய்யப்பட்டார்

(வவுனியா)

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வவுனியாவில் வீட்டில் வைத்து புலனாய்வுத்துறையினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட வவுனியா மாவட்ட செஞ்சிலுவைச்சங்க இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் விடுதலை செய்யப் பட்டுள்ளார். (க-27)

## வீதி திருத்தம்

(மல்லாகம்)

மானிப்பாய் கிழக்கு வடலித் தோட்ட வீதி மற்றும் கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள வீதிகளில் தற்போது திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. (சு-14)

## பஸ் சேவை

## நல்லூரான் திருவடிக்கு - 26

(பூங்காவனம்)



### தமிழ் உய்ய வரம் தா!

நல்லைபதி தொல்லைஅகல்
வந்தவினை வென்றுதமிழ்
வல்லவேல் முருகா
உய்யவரம் தாதா!

கங்கைசடை கொண்டசிவ
எங்கும்தமிழ் ஓங்கிபுகழ்
சங்கரன் மைந்தா
பெருகஅருள் தாதா!

ஆறுபடை வீடுகொண்ட
சிரும்பொலி திருவும்நிறை
ஆறுதிரு முருகா
வாகபெரு வரம்தா!

பெரும்பெரும் புகழும்மிகு
ஆரும்பெற லரியநின்
வண்ணத்தமிழ் குமரா
பாதம்தொழ புகழ்தா!

செ. புஸ்கரணி

### பூங்காவனம் காணும் பொன் நிலா

நல்லை முருகனுக்கு திருமணம்
நான்கு தமிழும் வாழ்த்தும் திருமணம்
பிள்ளை முருகனுக்கு திருமணம்
பேதங்கள் நீக்கும் திருமணம்
வள்ளி தெய்வானையுடன் திருமணம்
வசந்தம் பூத்திடும் திருமணம்

நல்லை அமிழ்தன்

### நாடிவருபவருக்கு நலம் அருள்வாய்

நாடிவருபவர்க்கு நலம் அருளும் வள்ளல்
நல்லூர் ஞான வேலவன் - அவனைப்
பாடித் துதிப்பவரின் பவவினை போக்கிடுவான்
பார்வதித் தாயின் பாலகன்

கோடிபக் தரை அழைக்கும் கோபுரமணி ஓசை
குமரனின் புகழ்பேசிடும் - அங்கே
தேடிவரும் அடியார் சிந்தையில் ஒளியேற்ற
செல்வவேல் சுடர்வீசிடும்.

குறிஞ்சி

### நாம்தேடும் அருள்கூட்டி அணைப்பாய் கந்தா

ராகம் - காபி

அப்படிச் செய்யும் போது
முகத்தைமறைத்துக்கொண்டு தென்கச்சி சுவாமிநாதன்

## தேங்காய் உடைக்கும் நிகழ்வு பக்தரின் சிரசை பதம்பார்த்தது

### காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில்

(அரியாலை)

நேற்று முன்தினம் இடம் பெற்ற நல்லூர் தேர்உற்சவத்தின் போது இடம்பெற்ற தேங்காய் உடைக்கும் நிகழ்வில் இடையில் அகப்பட்ட இருவர் தலையில்காயமடைந்துள்ளனர்.

இவர்களில்புங் குடுதீவு3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பூ. சிறீகாந்தன் (வயது 30) என்பவர் தலையில் பலத்த காயமடைந்தநிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுளார்.

காயமடைந்த பருத்தித் துறையைச் சேர்ந்த ரவிரபஜ் (வயது 4) என்றசிறுவன் சிகிச்சைபெற்று வீடு திரும்பியுள்ளார். உ-106)

## வெளிநாட்டுச் சேவை தரம் 3 போட்டிப்பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் 3க்கான பகிரங்க போட்டிப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

அடுத்த 2 ஆம் 3ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த மேற்படி போட்டிப்பரீட்சை, வெளிநாட்டமைச்சின் செயலாளரின் வேண்டுகோளுக்கமைய பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகளில் பங்கு கொள்ளவென இரண்டாயிரத்து 300 பேர் விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடில்லாத கொக்கட்டிச் சோலைப் பகுதிக்கு செப்ரெம்பர் 3-ஆம் திகதி முதல் புதியபஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஈச்சந்தீவு. கன்னங்குடா கூட்டுறவுச் சங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர்எஸ். விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(சு-60)

## பி.ஜே.பி.யின் புதிய தலைவர்

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சியின் புதிய தலைவராக பங்காரு லட்சுமன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மராட்டிய மாநிலத்தில் இடம்பெறும் பாரதீஜ ஜனதாக் கட்சியின் தேசியக் கூட்டத்தில் பங்காரு லஷ்சுமன் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதே சமயம், தலித் இனத்தவர் ஒருவர் பாரதீஜ ஜனதாக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்பது இதுவே முதல்த்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

[உ]

தாளம் -ஆதி

பல்லவி

நாம் பாடும் தமிழ்ப் பாட்டில் நிறையும் கந்தா-நிதம்
நாம் தேடும் அருள்கூட்டி அணைப்பாய் கந்தா-தினம்
................ (நாம் .. ...)

அனுபல்லவி

நாடாண்ட (தொ) நல்லூரில் நலம் காப்பவா- உயர்
காடாண்ட குறவள்ளிக் கிதம் சேர்ப்பவா - வளர்
................ (நாம் ......)

சரணம்

உறவெல்லாம் சாக்காடாய்த்துடித்தல்ஏனோ? தேடும்
ஊரெல்லாம் தீக்காடாய் எரித்தல் ஏனோ?- வாழும்
வீடெல்லாம் மண்மேடாய்க் கிடந்தல் ஏனோ? -ஓடும்
நாடெல்லாம் தெருநாயாய் அலைத்தல் ஏனோ? -
முருகா
................ (நாம்......)

நாமெங்கள் உறவோடு வாழ்தல் என்றோ? - கந்தா
நாமெங்கள் ஊர்மீண்டு வாழ்தல் எந்நாள்? - குமரா
இது வெங்கள் மனையென்றுமகிழ்தல்என்றோ?-குகனே
இதுவெங்கள் நாடென்று நிமிர்தல் எந்நாள்? – முருகா
................ (நாம் ......)

'முருகு'

---

## முருகாஉன்திருநாமம் ஒலிக்கட்டும்

தெருவெங்கும் காவடிகள் திருநடனம் புரியட்டும்
முருகா உன் திருநாமம் தினம் தோறும் ஒலிக்கட்டும்
பயத்தோடு உயிர்வாழும் பரிதாபம் தொலையட்டும்
துயர் நீங்கி சுக வாழ்வு சுதந்திரமாய்க் கிடைக்கட்டும்

சித்திர வரதன்

## உலகிலேயே 2 வது உயரக் கட்டடம் இடிந்துவிழும் அபாய நிலையில்

(மொஸ்கோ)

உலகிலேயே இரண்டாவது உயரமானது என்ற பெருமைக்குரிய கட்டடம் இடிந்து விழும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளது.

ரஷ்யாவின் தலை நகர் மொஸ்கோவில் உள்ள ஆயிரத்து 850 அடி உயரமான தொலைத்தொடர்புக் கோபுரம் அமைந்துள்ள கட்டடமே தீப்பிடித்துக் கொண்டதால் இந்நிலையினை எட்டியுள்ளது.

ரஷ்யாவின் அரச தொலைக்காட்சி நிறுவனங்கள் இயங்கும் மேற்படிக் கட்டடத்தில் மின்னொழுக்குக் காரணமாகவே தீப்பற்றிக் கொண்டதாக கூறப்படுகிறது.

இதனிடையே தீயை அணைக்கவெனச் சென்ற 6 தீயணைப்புப் பணியாளர்கள் மின் உயர்த்தியில் சிக்கியிருப்பதாகவும், 6 பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பிந்திக்கிடைத்த தகவல்களின்படி 16 மணிநேரத்தின் பின் பற்றியெரிந்த தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், 40 தீயணைப்பு இயந்திரங்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

# புருண்டி பிரச்சினையை தீர்ப்பதில் அமெரிக்க அதிபர் தீவிர ஈடுபாடு

### விரைவில் புருண்டி செல்வார்

(வாஷிங்டன்)

ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டு வரும் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், தனது பயணத்தை பயனுள்ளதாக்கும் வகையில் புருண்டி சென்று அங்கு நிலவு உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபடவுள்ளார்.

எகிப்து, நைஜீரியா ஆகிய நாடுகளின் பயணத்தை முடித்துக்கொண்டு தற்போது தன்சானியா புறப்பட்டிருக்கும் கிளின்டன். அதன் பின் அயல் நாடான புருண்டி சென்று சமாதான முயற்சிகளுக்கு பக்கத்துணை வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

புருண்டியில் நிலவும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும்வகையில், சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தென் ஆபிரிக்க முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலாவின் அழைப்பை ஏற்று பில்கிளின்டன் அங்கு செல்வது குறிப்பிடத்தக்கது. (உ)

# ஈரானில் தொடரும் மோதல்கள் வங்கிகள், அலுவலகங்கள் சேதம்

(தெகிரான்)

ஈரானில் இருவகைப்பட்ட அணியினருக்கிடையில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக ஈரானிலிருந்துவரும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

மறுசீரமைப்பு ஆதரவாளர்களுக்கும், பழமைவாதக் கொள்கையினர்க்குமிடையேயான மோதல்கள் ஈரான் மேற்குப்பகுதி நகரமான குராமாபாத்தில் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

கடந்த ஞாயிறன்று மாணவர்மாநாடொன்றில் கலந்துகொள்ளவெனச்சென்ற பழமைவாதம் பேணும் பேச்சாளர்கள் இருவரை, ஈரானிய அதிபர் முகமட்கடாபிக்கு ஆதரவான மறுசீரமைப்புக் கொள்கையினர் இடைமறித்ததையடுத்து இருபகுதியினருக்குமிடையில் மோதல்நிலை உருவாகியுள்ளது.

இந்தவரிசையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில், கலகத்தை அடக்கமுற்பட்ட பாதுகாப்புப்படைவீரர்ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

வங்கிகள், கடைகள் வேறு கட்டடங்கள்பலவும் அடித்து உடைக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### உலக தரிசனம்

## இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உல்பா போராளிகள் அரசிடம் சரண்

### இந்திய அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

கடந்த இருவருடங்களில், அஸாம் மாநிலத்தில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான உல்பா போராளிகள் ஆயுதம் சகிதம் சரணடைந்திருப்பதாக இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

வேலையில்லாப் பிரச்சினை காரணமாகவே இவர்கள் அனைவரும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகவும், சரணடைந்த அனைவரும் தமக்கு வேலைவாய்ப்பு வழங்குமாறு கோரி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இந்தியா முழுவதிலும் 4 கோடி 10 இலட்சம் இளைஞர் யுவதிகள் வேலையற்றிருப்பதாகவும் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

### புதுவையில் முன்னாள் தி.மு.க. கூட்டணி மீது ஊழல் குற்றச் சாட்டு

### விசாரணை நடத்த உத்தரவு

[பாண்டிச்சேரி]

புதுவையில் முன்னாள் தி.மு.க. கூட்டணி ஆட்சியினர் மீது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை நடத்த துணைநிலை ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

புதுவையில் புதியகாங்கிரஸ் கூட்டணி ஆட்சியினர் பதவிக்கு வந்த நாள்தொடக்கம் முன்னைய தி. மு. க. ஆட்சியினரின் ஊழல்களை வெளிக்கொணர வேண்டும் என்று சட்ட சபையின் உள்ளும் புறமும் பேசிவந்தார்கள் அதுவுமன்றி நடவடிக்கைகளும் எடுத்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

துணை ஆளுநர் ரஜனிராயின் உத்தரவை அடுத்துதான் இதைவரவேற்பதாகவும் அப்பொழுது தான் தி. மு. க. கூட்டணியின் உண்மையான நிலைப்பாட்டை மக்கள் உணர முடியுமென்று முன்னாள் தி. மு. க. புதுவைத் தலைவர் ஜானகிராமன் தெரிவித்தார்.

இதன் மூலமாக தி. மு. க, பற்றிய ஊழல் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்காலமென்றும் ஜானகிராமன் தெரிவித்தார். [து]

## துபாய் நகரச் சந்தை விழாவில் 9 மெற்றிக் தொன் தங்கம் விற்பனை

(லண்டன்)

துபாய் நாட்டு சந்தை விழாவில் 9 மெற்றிக் தொன் தங்கம் விற்பனையாகியிருக்கின்றது.

தங்க நகரம் என்று அழைக்கப்படும் துபாயில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் சந்தை விழா நடைபெறுகிறது.

பல நாட்டு மக்களும் கலந்து கொள்ளும் இந்த சந்தை விழாவில் தங்கம் முக்கிய இடம் பெறுகிறதென்றும்.

100 சதுர கிலோ மீற்றர் நகரான துபாயில் 77 நாடுகளின் 1280 நிறுவனங்கள்இயங்குகின்றன. உலகில் பிரபல்யமான நிறுவனங்களும் இவற்றில் அடங்கு[illegible]கின்றன.

இறுதியாக நடந்த சந்தை விழாக் கணக்கின்படி கிட்டத்தட்ட 250 கோடி டொலருக்கு வியாபாரம் நடை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. (து)

### சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன்

# நடிகர் ராஜ்குமாரை கடத்தியது முற்றிலும் பிழைஎனக் கூறமுடியாது

### சுப. வீரபாண்டியன் தெரிவிப்பு

(சென்னை)

சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பன் கன்னட நடிகர் ராஜ்குமாரை கடத்திய செயல் முற்றுமுழுதாக சரியென்று வாதிட முடியாவிட்டால் கூடஅச்செயலை முற்றுமுழுதாக நிராகரிக்கவும் முடியாது. என சுப. வீரபாண்டியன் காரசாரமாக தெரிவித்தார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நாம் ஜனநாயகரீதியில் விடுக்கும் கோரிக்கைகள் எதுவும் அரசின் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

சந்தனமரக்கடத்தல் வீரப்பன் போன்ற தீவிர நோக்குடையோர் தமிழ் நாட்டிற்குத் தேவையெனக் குறிப்பிட்ட வீரபாண்டியன்–

கர்நாடக அரசு காவிரிநீர்ப் பிரச்சினையில் நடந்து கொண்ட விதத்திற்கு இது போன்ற அதிரடி வைத்தியம் பலன் தரும் என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாக தடாச் சட்டத்தின் கீழ் கர்நாடகாவில் 51 கைதிகளுக்கு உச்ச நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை சந்தனக் கடத்தல் வீரப்பனின் அதிரடி வைத்தியத்தால் மாற்றக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். [து]

## ஊர்காவற்றுறைத் துறைமுகம் பொதுமக்கள் பாவனைக்குத் தடை

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறைத் துறைமுகம் பொதுமக்கள் பாவனைக்கு தடைசெய்யப்பட்டமையைத் தொடர்ந்து அதனூடாகப் பணயஞ் செய்த மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

கடந்த 3 மாத காலமாக இத் துறைமுகம் பாவனைக்குத் தடை செய்யப் பட்டுள்ளமையால் நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களிற்குச் செல்லும் பொதுமக்கள் பெருஞ் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

நகர வசதியுடன் கூடிய இத்துறைமுகம் தடைசெய்யப்பட்டதை அடுத்து அனலைதீவு எழுவைதீவு மக்கள ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைத்துறை முகத்தையும்; நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் குறிகட்டுவான் துறைமுகத்தை பயன்படுத்துகின்றனர்.

இதேவேளை நெடுந்தீவு குறிகாட்டுவானுக்கு இடையில் சேவையிலுள்ள குமுதினிப் படகு, ஊர்காவற்றுறை நெடுந்தீவுக்கிடையிலும் சேவையில் ஈடுபட்டால்தமது பிரயாண அசௌகாரியங்களைக் குறைத்துக் கொள்ளலாம் எனவும் பொதுமக்கள் தரப்பில் கருத்துத் தெரிவித்துக் கொள்கின்றனர், (செ-75)

## காற்பந்து நடுவர் உண்ணாவிரதம்

(லண்டன்)

காற்பந்தாட்ட மத்தியஸ்தர்களை தரமுயர்த்துவதில் றுமேனியா காற்பந்தாட்ட சம்மேளனம் மேற்கொள்ளும் நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை எனக்கூறி அந்நாட்டு காற்பந்தாட்ட மத்தியஸ்தர் ஒருவர் நேறுமுன்தினம் முதல் உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

இவ்வருட முற்பகுதியில் இடம் பெற்ற தரமுயர்த்தும் பரீட்சையில் தான் அதிக புள்ளிகளைப் பெற்றும் கூட சம்மேளனம் பக்கச்சார்பாக செயற்பட்டதால் தனதுதரம் உயர்த்தப்படவில்லை என்பதை ஆட்சேபித்து மேற்படி உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது: (உ)

## செஞ்சிலுவை சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பல் சேவை இன்று இடம் பெற மாட்டாது என செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இது வரை காலமும்சேவையில் ஈடுபட்டு வந்த "யாவா கல்வ்ட்" கப்பலுக்குப் பதிலாக "ஐயா கோல்ட்" கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த உள்ளதாகவும் இக்கப்பலுக்கான தொலைத்தொடர்பு கருவிகள் பொருத்தும் பணி தற்சமயம்திருமலையில் நடைபெற்று வருவதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இச்சேவை இடம் பெறுமென தாம்எதிர்பார்ப்பதாக செஞ்சிலுவை அதிகாரி தெரிவித்தளர்.

வெள்ளிக் கிழமை இடம் பெறும் சேவை குறித்த இறுதியான முடிவு இன்று மாலை வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார். (க-3)

## தொலை பேசிகள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

இணுவில், தாவடி, கொக்குவில் பகுதிகளில் மோட்டோறோலா தொலைபேசிகள் செயலிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இது குறித்து பாவனையாளர்கள் யாழ். தொலைத்தொடர்பு நிலையத்தில்தெரியப் படுத்தியபோதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந)

## மாதகலில் வீடு நாசம்

(இளவாலை)

மாதகல் பகுதியில் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இவ் அனர்த்தம் நிகழ்ந்தது. (க-12)

புத்தேளுலகத்தும்
ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.
- குறள் -

# வலம்புரி

## மெய்பொருள் காண்பதறிவு

கனேடிய தூதுவர் றூத் அச்சிபோல்ட் போல்டாக ஒரு விடயத்தைக் கூறியிருக்கிறார். காலம்காலமாக வெறும் வாய்க்குக் கிடைத்த அவலான பயங்கரவாதம் என்ற சொல்லை புலிகளிடமிருந்து நீக்கிய பெருமை அந்த வெள்ளை உள்ளம் கொண்ட வெள்ளைக்காரனுக்கு உண்டு. புலிகள் பயங்கரவாதிகள் அல்ல அவர்கள் விடுதலைப் போராளிகளே என்று அடித்துக் கூறியிருக்கிறார்.

தமிழ் மண் புரிந்துகொண்ட உண்மை பேரினவாதிகளுக்குப் புரியாத புதிர். அந்த அவல நிலையைப் போக்க றூத் தலைப்பட்டது போற்றத்தக்கதொன்று.

உலக நாடுகளின் அமைதி நிலவுவதையும் மனிதஉரிமைகள் பேணப்படுவதையும் உறுதிசெய்யப்பட வேண்டிய கடப்பாடு சர்வதேசத்திற்கும் உண்டு. பயங்கரவாதம் என்றால் என்ன என்பது தொடர்பாக கனடா தெளிவான வரையறைகளைக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர் என்பது அச்சிபோல்ட்டின் வாதம்.

காலம் கடந்த ஞானம் எங்கள் மண்ணுக்கு ஒன்றும் புதிதல்ல. ஆகவே உயிர்களை ஆகுதியாக்கிய இனப் பிரச்சினைக்கு தீர்க்கமான அரசியல் தீர்வொன்றே வேண்டும் புதிய இராணுவத்தளபதி பலகல்லேயும் இந்தக் கருத்தையே பதவியேற்ற பின் போது கூறியிருக்கிறார்.

# பட்டதாரி; தகுதிகாண் ஆசிரியர்களை
# சேவைக்குள் உள்வாங்க முயற்சி செய்யவும்

[யாழ்ப்பாணம்]

திருப்திகரமான ஒரு வருட சேவையை முடித்துக் கொண்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களையும் 04 வருட சேவையை முடித்துக் கொண்ட தகுதிகாண் ஆசிரியர்களையும் தாமதமின்றி ஆசிரிய சேவைக்குள் உள்வாங்குவதற்கு தகுந்த நடவடிக்கை உடன் எடுக்கவும்.

மேற்கண்டவாறு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி, கலாசார அமைச்சு செயலாளருடன் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் நடத்திய சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

அச்சந்திப்பில்மேலும் எடுத்துரைக்கப்பட்ட விடயங்களாவன;

### இடர்காலக் கொடுப்பனவு

ஏற்கனவே கொடுக்கப்படாத பின்வரும் காலங்களுக்குரிய இடர்காலக் கொடுப்பனவு இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(அ) 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரை.

(ஆ) 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை.

(இ) இக் கொடுப்பனவின் போது ஏற்கனவே வழங்கப்பட்ட இடர் காலக் கொடுப்பனவுகளுக்கு தற்போது அதிபர்களுக்கு வாங்கப்பட்டிருக்கும் புதிய சம்பளத் திட்டத்திற்கு அமைவாக பாக்கிப் பணமும் வழங்கப்படல் வேண்டும்.

(ஈ) வழங்கப்படவிருக்கும் இடர்காலக் கொடுப்பனவுகள் பாடசாலை விடுமுறை நாட்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

### ஆசிரியநியமனம்

வழங்கப்படவிருக்கும் ஆசிரிய நியமனத்தில் பட்டதாரி ஆசிரிய நியமனமும் வழங்கப்படுவதோடு தீவக வலயத்திற்கு தீவக கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைவாக ஆசிரியர் தொகையினர் நியமிக்கப்படல் வேண்டும். இதன் மூலம் நீண்ட காலம் தீவுப் பகுதியில் சேவை புரியும் ஆசிரியர்களை மற்றைய வலயங்களுக்கு விடுவிக்க முடியும். பட்டதாரி ஆசிரிய நியமனத்திற்கு இடம் இல்லை என்பதை எமது சங்கத்தினால் ஏற்றுக் கொள்ள முடியாது. என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

### சேவைக்குள் உள்வாங்கல்

இந்த மாதம் முடிவடைவதற்குள் உருத்துடைய சகல ஆசிரியர்களையும் புதிய ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கும் வேலைகளை முடிக்கும் வண்ணம் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கும் வண்ணம் கோருகின்றோம். ஆசிரிய சேவை 1ந் தரந் தவிர மற்றைய தரங்களுக்கு பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களின் பதவி உயர்வுக்கான கடிதங்களை வழங்குவதற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரத்தை வழங்குமாறு கோருகின்றோம். இதனால் தேவையற்ற தாமதத்தை நீக்க முடியும்.

தொலைக் கல்வி மூலம் பயிற்சி பெற்ற பல ஆசிரியர்களின் சான்றிதழ்களும், உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளும் நீண்ட காலமாக கிடைக்காமல் இருக்கின்றது. கடந்தவருடம் தங்கள் அமைச்சினால் உத்தியோக ரீதியாக பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டன. எனவே இவற்றைத் துரிதமாகப் பெற ஆவண செய்யுமாறு கோருகின்றோம்.

வலயங்களுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றங்களைச் செய்வதற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அதிகாரத்தை வழங்குவதோடு, வலய, மாகாண மட்டத்தில் ஆசிரிய தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இடமாற்ற சபையை அமைப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கண்டிப்பான கட்டளையைப் பிறப்பிக்கவும். எதிர் காலத்தில் எமது சங்கத்தின் பிரதிநிதிகளுக்குத் தெரியாமல் செய்யப்படும் இடமாற்றங்களை எதிர்க்க வேண்டியசூழ்நிலை ஏற்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் இடம் பெயர்ந்து நடைபெறும் பாடசாலைகளுக்காகவும், ஆசிரியர் மாணவர்களுக்காகவும் சங்கம் பல ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்ட போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, எதிர் காலத்தில் இவர்களுக்கான கோரிக்கைகளுக்கும் தங்களின் பூரண ஒத்துழைப்பு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

கலந்துரையாடலில்மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

வெளிநாடுகளில் நடைபெறும் அதிபர்கள், ஆசியர்களுக்கான பயிற்சிகளுக்கு யாழ். மாவட்டத்தைச் சார்ந்தவர்களைத் தெரிவு செய்து அனுப்புவதற்காக அவர்களுடைய சகல விபரங்களும் அடங்கியபெயர்ப்பட்டியலை கணனி மயப்படுத்தல்.

அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் புதிய கல்விச்சீர் திருத்தத்திற்கு அமைவாக நடத்தப்படும் சகல கருத்தரங்குகளையும் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வசதியாக திருகோணமலையிலிருந்து அதிகாரிகள் இங்கு வருகை தரல். புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான சகலபாட நூல்களைக் குறிப்பிட்ட காலத்தில் இங்கு கிடைக்க ஆவண செய்தல்

மாகாண மட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் ஆசிரிய இடமாற்ற சபை மூலம் ஐந்து வலயங்களுக்கிடையே ஆசிரிய ஆளணியினரைச் சம நிலைப்படுத்தல்.

வழங்கப்பட வேண்டிய 1998ம் ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான இடர் காலக் கொடுப்பனவை உடன் வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அத்தோடு ஏற்கனவே வழங்கப்பட்ட இடர் காலக் கொடுப்பனவுகளில் அதிபர்களின் சம்பள உயர்ச்சிக்கு ஏற்ப பாக்கிப்பணத்தை வழங்கல்.

ஆசிரியர்களை புதிய ஆசிரியசேவைக்குள் உள்வாங்கும் விடயத்தில் துரித நடவடிக்கை எடுப்பதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதென்றும், இதற்காக பாக்கிச் சம்பளத்தை வழங்கதுரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது அகாலமரணமடைந்த அதிபர்கள், ஆசிரியர்களுக்கான நஷ்டஈடுத் தொகை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி சந்திப்பின்போது த. பஞ்சலிங்கம் சிரேஷ்ட பொதுச் செயலாளர், பி. அருணகிரிநாதன் தலைவர் வேலணைக் கிளை, எஸ். சிவனேசன் தலைவர்-சண்டிலிப்பாய் கிளை, எம் விஸ்வலிங்கம் தலைவர் - கோப்பாய்க் கிளை, எஸ். சின்னராசா செயலாளர் கோப்பாய்க் கிளை, சு. கோகிலன் செயலாளர்நல்லூர்க்கிளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

(க)

## சம்பளக் கொடுப்பனவு

(அரியாலை)

பனை மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கான ஜூலை மாத சம்பளக் கொடுப்பனவு கள் இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை மருதனார்மடம் [illegible]

## நல்லூரில் நேற்று அடியவர்களுக்கு
# இடைஞ்சல் ஏற்படுத்தும்விதத்தில்
# 'பக்த கேடிகளின்' செயற்பாடு

கிறார்.

குடாநாட்டில் போர் எந்த நேரமும் மீண்டும் தீவிரமடையலாம் என்ற அச்ச உணர்வு மக்களிடையே பரவியுள்ளது. இந்த வேளையில் தேர்தல் புளக்காரங்கள் தடல்புடல் அந்தச் சுறுசுறுப்பு தியாகத்தின் அடித்தளத்தில் இருந்து எழுவது அல்ல. சுகபோகத்தின் சுருதியே அது.

தேர்தல் ஒன்று நெருங்கி நிற்கும் வேளை தேரில் வந்த கடவுளை நோக்கி சிற்பி சோரம் போகும் நிலைமை நீக்கிச் சிறந்த மாற்றம் கேட்டிருந்தார். இவ்வாறு மக்கள் உள்ளம் பலகோணங்களில் மறுஇநிற்கும் வேளை இது.

உண்மைகள் புலரா ஸ்ரீலங்காவில் காலம் எடுப்பதுதான் சாபக்கேடு. உண்மைகளைத் தீர்க்கமாக உணர்ந்து தீர்வு ஒன்றினைக் காணத் தலைப்படுவார்களா?

அன்புடன் ஆசிரியர்

---

இராமநாதன் கல்லூரியில் இயங்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (106)

## நியமன பத்திரம் தாக்கல் இல்லை

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் இரண்டாவது நாளான நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் எவ்வித அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் நியமனத்தைத் தாக்கல் செய்யவில்லை என உதவித் தேர்தல் ஆணையாளர் அ. சிவபாத சுந்தரம் தெரிவித்துள்ளார்.

முதல் நாளான நேற்று முன்தினம் எவ்வித நியமனப் பத்திரங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு தேர்தல் அலுவலகத்தில் வாக்குப் பெட்டிகளைத் துப்பரவு செய்து பழுது பார்க்கும் நடவடிக்கைகள் துரிதமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இம்முறை புதிய வாக்குப் பெட்டிகள் தயாரிக்கப்படஉள்ளதாக தேர்தல் ஆணையாளர்மேலும் தெரிவித்துள்ளார். (சு)

---

# பொதுஅமைப்புகள் பலவும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவல் தீர்த்தஉற்சவத்தில் நேற்று பக்தகோடிகளின் இறைஉணர்வுக்கும், ஆலய வழிபாட்டுநிகழ்வுகளுக்கும் இடைஞ்சலகளை ஏற்படுத்தும்விதத்தில் 'பக்தகோடிகள்' சிலர் செயற்பட்டதாக மக்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

சிவபூசைக்குள் கரடிநுழைந்ததுபோல் இளைஞர்கள் சிலர் தீர்த்தக்கேணியிலிருந்து நீரை அள்ளி கண்டபடி இளம் பெண்கள்மீது அபிஷேகம் செய்தசெயல்குறித்து சைவ அபிமானிகள்பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, தீர்த்தநிகழ்வில் இவ்வாறானவர்கள் புரிந்தவம்புத்தனங்களால் பக்தர்கள் குளிக்கப்போய் சேறுபூசிய நிகழ்வுகளும், மக்களிடையேநசியுண்டு விழுந்தெழும்பி வீண்சிரமப்பட்ட சம்பவங்களும் ஆங்காங்கே நடைபெற்றதாகவும் தெரியவந்துள்ளது.

ஆலய உற்சவங்களின் உண்மைப்பொருளை உணராத வகையில்நடந்து, உற்சவ கால நோக்கங்களை தமது சின்னத்தனங்களுக்காக திசை மாற்றும் இப்படியானவர்கள் குறித்து விழிப்புணர்வுடன் செயற்பட்டு எமதுசமயத்தை அழிவுப்பாதையில் இருந்து மீட்டெடுக்க வேண்டியது அவசியம்எனவும் சமயப்பற்றுடையோர்பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளையில் ஹெலியிலிருந்து பூக்கள் முருகப்பெருமான்மீது தூவப்பட்டபோது சிலர் அப்பூவைஏந்திக் கண்ணில்ஒற்றிகொண்டதுடன் ஹெலியைநோக்கி கும்பிட்டனர்.

சனநெரிசலிற்குள் சிக்குண்டவயோதிப பெண்ஒருவர் சோர்வடைந்தநிலையில் செஞ். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரால் தூக்கிச்செல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## பொதுப்பரீட்சை

(அரியாலை)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி உயர்தரமாணவர்களுக்கான, தொண்டைமானாறு வெளிக்களநிலையப் பொதுப் பரீட்சை, காலைநேரப் பாடங்கள் இணுவில் பொதுளியற்கல்லூரியிலும், மாலை நேரப்பாடங்கள் இணுவில் மத்தியகல்லூரியிலும் இன்று புதன்கிழமைமுதல நடைபெறவுள்ளதாக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் மாணவர்களுக்கு அறிவித்துள்ளார். (செ-106)

---

## அதிதீவிர சத்திர சிகிச்சை பிரிவிற்கு மாற்றம்

புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் தலையில் காயமுற்றநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த செல்வராசா யாமினி (வயது 12) தற்போது அதி தீவிர சத்திரசிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று மாலை வாதரவத்தைப் பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் மூன்று வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், மாடுகள் இரண்டு பலியாகியமையும் குறிப்பிடத்தக்கது. (உ-12)

# தமிழர்களின் பிரச்சினைகள் எதுவும் வறிய சிங்கள மக்களுக்கு தெரியாது

## புதிய ஜ.இ.மு.முதன்மை வேட்பாளர் கருத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ் மக்கள் சுய உரிமை அடிப்படையில் வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழ வேண்டும் என்ற அடிப்படையில் நாம் இந்த தேர்தலில் பங்குபெற்றுகிறோம்.

வடக்குக் கிழக்கு மாகணங்கள் பிரிக்கப்படுவதை ஏற்க முடியாது இதேவேளை அஷ்ரப்பின் தென்கிழக்கு அலகையும் நிராகரிக்கிறோம். ஆனால்முஸ்லிம்கள் வடக்குக் கிழக்கில் சுதந்திரமாக வாழ்வதை உறுதிசெய்யவேண்டும்

இவ்வாறு நேற்றைய தினம் புதிய ஜனநாயக இடதுசாரி முன்னணியால் அத்தியடியில் உள்ள அவர்களது அலுவலகத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றும் போது முன்னணியின் யாழ்மாவட்டமுதன்மை வேட்பாளர் காசிப்பிள்ளை செந்திவேல் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கையில் 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் சாதிக்கமுடியாததை 25வயது புத்தபிக்குவால் சாதிக்க முடிகிறது. ஆனாலும் சந்திரிகாவின் தீர்வுத்திட்டத்தில் எந்த ஒரு உருப்படியான தீர்வும் கிடையாது. சலுகையைப்பற்றி நினைப்பதையும், பேசுவதையும் விட உரிமையைப் பற்றி பேசுவதே சிறந்தது. தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக வறிய சிங்கள மக்களுக்கும் சிங்கள இளைஞர்களிறகும் எதுவும் தெரியாது தமிழ்மக்களின் பிரச்சினையை சிங்கள மக்களின் அடிமட்டம் வரை புரிய வைப்பதன் மூலம் எமது விடுதலையை வென்றெடுக்க முடியும் என்றார் இக்கூட்டத்தில் இ. தேவதாஸ், க. தணிகாசலம், கா.கதிர்காமநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்

# பொதுத்தேர்தலில் போட்டியிடும் எண்ணம் கூட்டுறவாளர்களுக்கு இல்லை

## சி.வி,கே, சிவஞானம் தகவல்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத்துறையைப் பொறுத்தவரையில் கூட்டுறவாளர்களுக்குப் பல்வேறு தேவைகளும் பிரச்சினைகளும் உண்டு. இப்பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடியவர்களுக்கு ஆதரவு வழங்குவது பற்றி கூட்டுறவாளர்கள் பரிசீலித்து வருகிறார்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும்யாழ்மாவட்ட விவசாய, கூட்டுறவுக்கிராமிய வங்கிகளின்சமாசத் தலைவருமானசி.வி.கே. சிவஞானம் வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டுறவாளர்களின்தேவைகளைபிரச்சினைகளை தீர்த்து வைக்கக்கூடியவர்களுக்கு ஆதரவு வழங்குவது பற்றி பரிசீலிக்கும் அதேவேளை தேர்தலில் சுயேட்சைக்குழுவாகப் போட்டியிடும் எண்ணம் தம்மைப்பொறுத்தவில் இல்லை என்று கூறினார்.

இதேவேளை வேறு கூட்டுறவாளர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இருந்திருக்கலாம் என்பது பற்றி என்னால் எதுவும் கூற முடியாது எனத்தெரிவித்துள்ளார். (வ)

### வேட்பாளர்......

இடம்பெற்று வரும் முறுகல் நிலைகாரணமாக வேட்பாளர் தெரிவில் காலவாமதம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கியதேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் இதுவரை வேட்பாளர் பட்டியல் பூர்த்தி செய்யப்படாதஇழுபறி நிலை ஒன்றையே காணமுடிகிறது. வடக்குக்கிழக்கு மாகணங்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக்கட்சி தனது வேட்பாளர்களை நிறுத்துவதில் பலவித சிரமங்களை அனுபவிக்கிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் 46 அரசியல் கட்சிகள் போட்டியிடுவதற்காகதம்மை பதிவு செய்து கொண்டுள்ள போதும் ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியே யாழ்ப்பாணத்தில் முதல்முதலாக வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது.

இதேவேளை திருமலை மாவட்டத்தில் வி.சூரியமூர்த்தி தலைமையில் ஒரு சுயேட்சைக் குழுவும் பல்பிட்டிக்கம வர்ணசிறி தலைமையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆர்.துரைரட்ணம் தலைமையிலும் கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவையை சேர்ந்த கிறிஸ்தோபு பதுகேமகேஸ்மங்கள தலைமையிலும் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. (வ)

### முஸ். காங்கிரஸ்....

வேண்டி வரும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதிக்கு காலக்கெடுவிதித்துள்ளார்.

மக்காவில் இருந்து நேற்று நாடு திரும்பிய அஷ்ரப் வேட்பாளர் தெரிவு தொடர்பாக ஜனாதிபதிக்கு விடுத்த முதலாவது காலக்கெடு இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

### மன்னார்...

அருகில் உள்ள முன்னணிக் காவல் அரண்கள் தாக்குதலுக்கு உள்ளான தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதல்நடைபெற்ற போது மன்னார் வவுனியா வீதிப் போக்குவரத்து சில மணி நேரம்துண்டிக்கப்பட்டு இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளின் தாக்குதலின் போது இராணுவத்தினர் பதில் தாகுதல நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தள்ளாடி இராணுவ முகாம் மீது மேற்கொண்ட தாக்குதல் சுமார் 6 மணி நேரம் நீடித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ-7)

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புகுழுத் தலைவராக தொடர்ந்தும் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தி லுள்ள அவசியமான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு வசதியாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் செயற்படுவார்.

நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனுக்கு அனுப்பிய அவசர பக்ஸ் செய்திமூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி யின்செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் பொதுத் தேர்தல் வரை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக செயற்படுவார் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்ட முடியாமையினால் யாழ் மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான முடிவுகள் எதனையும் எடுக்கமுடியாமல் இருந்தது தெரிந்ததே. (ந)

## உரும்பிராயில் சந்தை திறப்பு

உரும்பிராய் மத்தியசந்தையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று நடைபெறுகின்றது. ஈ.பி.டி,பி.பிரமுகரும் வலி. கிழக்கு பிரதேச சபையின் தலைவருமான பூ. குணசிங்கம் தலைமையில் இத் திறப்புவிழா நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (வி.கே. ஜெகன்)யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி இ.கமலநாதனும் கலந்து கொள்வர்.

நல்லூர் பிரதேச சபையின் தலைவரும் ஈ.பி.டி. பி. யின் யாழ்,மாவட்ட பிரதி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன்சிறப்புவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

# இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்தை முன்கூட்டி வழங்க யாழ். அரச அதிபர் பணிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதத்திற்குரிய நிவாரணப் பொருட்களை செப்ரெம்பர் மாதத்தின் 1ம் 3ம் வாரங்களில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் க. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

யாழ் செயலகத்தின் ஊழியர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபட இருப்பதால் நிவாரணப் பொருட்களை முன்கூட்டியே வழங்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (வ-2)

## ஐ.தே.க. உறுப்பினர் இராஜினாமா

(கொழும்பு)

கண்டி மாவட்டமுன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத்கோன்தவகே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

அவர் தமது பதவி விலகல்

# மட்டுநகர், திருமலை, வவுனியாவில் தமிழ்க் காங்கிரஸ் வேட்புமனு தாக்கல்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி திருமலை மாவட்டத்தில் சட்டத்தரணி செல்வி சுபாஷினி தலைமை

கஜன்
திரை
ஊர்காவற்றுறை

ராஜா
யாழ்ப்பாணம்

ஊர்காவற்றுறை
கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்
**கிழக்கு வாசல்**
காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி652)

யாழ்ப்பாணம்
நவரசநாயகன் கார்த்திக்
கௌசல்யா
அப்பாஸ் ராதாரவி
நடித்த
**பூவேலி**
10.30, 2.00 [பு/நே]
(கி737)

ளார்.

அவர் தமது பதவி விலகல் தொடர்பாகக் கருத்துத்தெரிவிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியில் சமூக, பொருளாதார அரசியல் நடைமுறைகள் ஏற்றுக்கொள்ளமுடியாதவை எனவும் அதனால் ஏற்பட்ட விரக்தியும், இன்னமும் வெளியே சொல்ல முடியாத பலகாரணங்களாலுமே தான் இராஜினாமாச் செய்வதாக அவர் தெரிவித்தார்.

(2)

### இராஜினாமாச்...

மாச் செய்தபின் அமைச்சருக்குரிய சகல வசதிகளையும் அஷ்ரப் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### முஸ்லிம்...

முடிவு அறிவிக்காது போனால் பொதுஜன ஐக்கிய முன்னணி தனது வேட்பாளர் பட்டியலை பூர்த்தி செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


மாவட்டத்தில் சட்டத்தரணி செல்வி சுபாஷினி தலைமையிலும வவுனியா மாவட்டத்தில் சட்டத்தரணி பரயசிவம் சிறிதரன் தலைமையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டத்தரணி சச்சிதானந்தம் தலைமையில் 2 ஆம் திகதி சனிக்கிழமை வேட்பு மனுத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் ந. குமரகுருபரன் 'வலம்புரி'க்கு நேற்று தெரிவித்தார். (வ)

**இளைஞர்களே! யுவதிகளே!**
**படித்து முடித்து பட்டம் பெற்று**
**வேலையற்று வீதியில் அலைவது எதுவரை?...**
**உங்கள்கனவுகளை நனவாக்க, உங்கள் வாக்குகள்**

# ஈழமக்கள் ஜனநாயக கட்சிக்கே!

# ( ஈ. பி. டி. பி )

வீணையே உங்கள்சின்னம்! சேவையே எங்கள்எண்ணம்!!




1999ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக
(கி/736) 53 லஞ்சத்து 50 ஆயிரம் ரூபா ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible]
[illegible] 30 [illegible]